# வாழ்க்கைக் கடலில் பிரயாணம் (27:1–21)

*நடபடிகளின் 27ம் அதிகாரம் மிகவும் குறிப்பிடத் தக்கதொரு அதிகாரமாகும். அது ஒரு சில வாரங்கள் மட்டுமே ஆகக் கூடிய கடல் பிரயாணம் ஒன்றிற்குப் பல மாதங்கள் ஆனதை விபரமாக விளக்கும் அதிகாரமாகும் - கொந்தளிக்கும் கடல், கப்பற் சேதம் மற்றும் மயிரிழையில் உயிர் பிழைத்தல் போன்ற திகில் கொடுக்கும் சாதனைகள் நிறைந்த அதிகாரம் ஆகும்.*[1]

*இவ்வரலாற்றை உள்ளடக்கியதில் லூக்காவின் நோக்கம் என்ன? நல்ல வரலாறொன்றை லூக்கா விரும்பினார், ஆனால் சாதாரணமாகத் தமது வார்த்தைகளில் சிக்கனத்தைக் கடைப் பிடிக்கும் ஒரு எழுத்தாளருக்கு இதைப் போதுமான அளவு நியாயப்படுத்த இயலாததாகக் காணப்படுகின்றது. இப்புத்தகத் தின் கடைசிப் பகுதியில் பவுல் ரோமாபுரியைச் சென்று சேர்ந்தது எப்படி என்பதைக் கூறுவது என்ற லூக்காவின் முதன்மை நோக்கத்தில் இதற்கான பதில் காணப்படலாம். "பவுல் ரோமாபுரி சேர்ந்தது எப்படி?" என்ற கருத்துக்குக் கீழே இன்னொரு கருத்து உள்ளது: "பவுல் ரோமாபுரி சேர்வதைச் சாத்தான் தடை செய்ய முயற்சி செய்தது எப்படி?"*

*தெசலோனிக்கேயில் இருந்த சபைக்கு எழுதும்போது பவுல், "சகோதரரே ... உங்கள் முகத்தைப் பார்க்க வேண்டுமென்று மிகுந்த ஆசையோடே அதிகமாய்ப் பிரயத்தனம் பண்ணி னோம். ஆகையால், நாங்கள் உங்களிடத்தில் வர இரண்டொரு தரம் மனதாயிருந்தோம், பவுலாகிய நானே வரமனதாயிருந் தேன்; சாத்தானோ எங்களைத் தடை பண்ணினான்" (1 தெச. 2:17, 18; அடிக்கோடிட்டவை என்னால் வலியுறுத்தப்படு கின்றன). பவுல் தெசலோனிக்கே நகருக்குச் செல்லாதபடிக்குத் தீய எண்ணம் கொண்ட யூதர்களால், சாதகமற்ற சூழ்நிலை களால் மற்றும் தூரம் ஆகியவற்றால் தடை செய்யப்பட்டார் -*

ஆனால் அவை யாவும் சாத்தானால் பயன்படுத்தப்பட்ட கருவிகளே என்று அவர் புரிந்து கொண்டார்.

பவுல் தெசலோனிக்கே செல்வதைச் சாத்தான் விரும்பாதிருந்தான் என்றால், அந்த அப்போஸ்தலர் ரோமாபுரிக்குச் செல்லுவதை அவன் எவ்வளவு அதிகமாய் விரும்பாது இருந்திருப்பான்! பவுல் ரோமாபுரியைச் சென்று அடைந்தால், உலக முழுவதற்கும் சுவிசேஷத்தைப் பரப்புவதற்கான ஒரு அடித்தளமாக பேரரசின் அந்த நகரத்தை அவர் பயன்படுத்திக் கொள்ள முடியும் - சாத்தானால் அதைச் சகித்துக் கொள்ளக் கூடாதிருந்தது! "ரோமாபுரியையும் காண வேண்டும்" என்ற பவுலின் கனவு (19:21) நனவாவதைத் தடுப்பதற்குச் சாத்தான் தனக்குக் கிடைத்த ஒவ்வொரு வழியையும் பயன்படுத்திக் கொண்டிருந்தான்: ஆசியாவிலிருந்து வந்த கலகக்காரர்கள், திகைப்படைந்த போர்ச் சேவகர்கள், பழி பாவங்களுக்கு அஞ்சாத யூதத் தலைவர்கள், தீர்மானம் கொண்ட கொலை காரர்கள், முடிவு செய்ய முடியாத ரோம தேசாதிபதிகள். இருப்பினும், இவையெல்லாவற்றிலும் தேவன் பவுலுடன் கூட இருந்தார். பவுல் அல்ல, சாத்தானே தடை செய்யப்பட்டான். சாத்தானுடைய மிகச் சிறந்த (ஒருவேளை மிக மோசமான) முயற்சிகள் தொடர்ந்த போதும், அந்த அப்போஸ்தலர் ரோமாபுரிக்குச் செல்லும் தமது வழியில் இருந்தார் (27:1).

சாத்தான் தோல்வியை ஒப்புக் கொண்டானா? ஒரு பொழுதும் இல்லை! மாறாக, அவனது கோபம் ஆகாயம் அளவு அதிகரித்தது என்பது உறுதியாகும். அதிகாரம் 27லும் அதிகாரம் 28ன் முதற்பகுதியிலும் நாம், பவுல் தமது பயணத்தை முடிக்காதபடிக்குத் தடை செய்யச் சாத்தான், மதியீனமான மனிதர்கள், எளிதில் உடையக் கூடிய கப்பல்கள் மற்றும் இயற்கையின் சீற்றம் (கடும் காற்றுகள், சீற்றம் கொண்ட அலைகள், அபாயம் விளைவிக்கும் மணல் குன்றுகள், விஷப் பாம்புகள்) போன்ற தனக்குக் கிடைத்த ஏதொன்றையும் - ஒவ்வொன்றையும் - பயன்படுத்தி முயற்சி செய்ததை நாம் காணப் போகின்றோம்! இந்தக் கொலை முயற்சிகளில் இருந்து பவுல் எப்படித் தப்பிப் பிழைக்க முடிந்தது? அவர் எருசலேம் மற்றும் செசரியாவில் தேவனுடைய பரிவிரக்கமுள்ள பராமரிப்பினாலும் தேவன்மீது அவர் கொண்டிருந்த விசுவாசத்தினாலும் சாத்தானுடைய தாக்குதல்களை மனத் திண்மை

*யுடன் தாங்கிக் கொண்டது போலவே இதிலும் தாங்கிக் கொண்டார்!*

*“அதிகாரம் 27ல் நாம் பவுலின் இன்னொரு பக்கத்தைப் பார்க்கின்றோம்” என்று விளக்கவுரையாளர்கள் பலர் கூறுவதென்பது, இவ்வரலாற்றை லூக்கா அந்த நோக்கத்திற்காகவே எழுதினார் என்பது போல இருக்கின்றது. பவுலை நாம் இவ்விடத்தில் (கிறிஸ்தவர்களல்லாத) மனிதர்களுக்குத் தலைவர் என்ற மாறுபட்ட ஒரு பாத்திரப் படைப்பில் காண்பது உண்மையே. இருப்பினும் லூக்கா பவுலையல்ல, பவுலின் தேவனைப்பற்றியே வலியுறுத்தினார். நாம் பார்க்கப் போகின்றபடி, கப்பலானது புயலுக்குத் தப்புவது என்பது மனிதச் செயலால் முடியாத காரியமாய் இருந்தது; தேவன் அதில் அடியெடுத்து வைப்பது தேவையாய் இருந்தது. இந்த விபரத்தின் மையப்பொருளாய் இருப்பது வசனங்கள் 23 முதல் 25 வரையுள்ள பகுதிகளில் பவுல் தம் சக கப்பல் பயணிகளுடன் பேசிய பின்வரும் கருத்தேயாகும்:*

> *ஏனென்றால், என்னை ஆட்கொண்டவரும் நான் சேவிக்கிறவருமான தேவனுடைய தூதனானவன் இந்த இராத்திரியிலே என்னிடத்தில் வந்து நின்று: பவுலே, பயப்படாதே, நீ இராயனுக்கு முன்பாக நிற்க வேண்டும். இதோ, உன்னுடனேகூட யாத்திரை பண்ணுகிற யாவரையும் தேவன் உனக்குத் தயவு பண்ணினார் என்றான். ஆனபடியினால் மனுஷரே, திடமனதாயிருங்கள். எனக்குச் சொல்லப்பட்ட பிரகாரமாகவே நடக்கும் என்று தேவனிடத்தில் நம்பிக்கையாயிருக்கிறேன்.*

*அதிகாரம் 27ஐ எழுதுவதில் லூக்காவின் நோக்கம் இருமடங்கானதாய் இருக்கின்றது: (1) பவுலின் வாழ்வில் தேவன் எப்படித் தொடர்ந்து செயல்பட்டார் என்பதைக் காண்பிப்பதும், அதன் மூலம் (2) நரகத்தின் சக்திகளும்கூட தேவனுடைய திட்டங்கள் மற்றும் நோக்கங்களை மோசம் போக்காது (போக்க முடியாது) என்பதை விளக்கப்படுத்துவதுமேயாகும். இதில் நமக்கு ஏதேனும் சம்பந்தம் உள்ளதா? நிச்சயமாக அப்படியே உள்ளது. சாத்தான் தொடர்ந்து நம்மை அழிக்க முயன்று நமது வாழ்வில் தேவனுடைய நோக்கத்தைத் தோல்வியடையச் செய்ய முயற்சிக்கின்றான் (1 பேது. 5:8).*

நம்மில் ஒவ்வொருவரும் உயிர் பிழைப்பதற்கு தேவனுடைய உதவி தேவையாய் இருக்கின்றது. அதிகாரம் 27 ஆனாது நமது சொந்த வாழ்க்கையில் நாம் எதிர் கொள்ளும் புயல்களைச் சந்திக்க நமக்கு தைரியம் தருகின்றது.

“வாழ்க்கைப் புயல்கள்” என்று நான் பேசும் போது, என்னைத் தவறாகப் புரிந்து கொள்ள வேண்டாம். இத்தாலி செல்லும் கப்பல் புயலில் அகப்பட்டதை லூக்கா ஒரு உருவக நடையில் எழுதவில்லை; அலைகள் அங்கு உண்மையானவை களாகவும், அபாயம் நிஜமானதாகவும் இருந்தன. எப்படி யிருப்பினும், பவுலின் ரோமப் பயணத்திற்கும் நமது வாழ்க் கைப் பயணத்திற்கும் ஒப்பீடு செய்வதை ஒரு சில விளக்கவுரை யாளர்கள் மட்டுமே எதிர்த்து நிற்க முடியும். இது லூக்கா ஏறக்குறைய தமது வசனங்களை கடல் பயணங்கள் கொண்ட மோட்சப் பிரயாணமாகவே[2] எழுதினார் என்பது போலவே காணப்படுகின்றது.

அதிகாரம் 27க்கு நான் உங்களை அழைத்துச் செல்லுகை யில், அதை உணர்வுப்பூர்வமான அருஞ்செயல் என்று நீங்கள் மகிழ்வுடன் அனுபவிக்க வேண்டுமென்று நான் விரும்புவேன். அதே வேளையில், நீங்கள் உங்கள் சொந்த வாழ்வின் அனு பவங்கள் இதற்கு இணையாக இருந்தால் அவைகளை நீங்கள் காண வேண்டுமென்றும் நான் விரும்புகின்றேன். பவுலின் பயணத்தைப் போலவே, நம்மில் பலருடைய வாழ்க்கையும் நல்ல மற்றும் மோசமான நாட்களைக் கொண்டதாகவும் - எந்த நேரத்திலும் எதிர்பாராதவைகள் நடக்க முடியும் என்பதாகவும் இருக்கின்றது! இந்தப் பாடத்தில் நாம் “எதிர்க் காற்றுகள்” மற்றும் புயலை முக்கியத்துவப்படுத்தி அதன் மூலம் பவுலின் பிரச்சனைகளை அடையாளம் காணக்கூடும்படிப் பார்ப் போம். அடுத்த பாடத்தில், அதிகாரம் 27ல் ஆச்சரியமான முடிவைப் படித்து அதன் மூலம் தேவனுடைய தீர்வைப் பாராட்டுவோம்.

## “நாங்கள் கடல் பயணம் செய்யப் புறப்பட்டோம்” (27:1-3)

*பவுல் இராயனுக்கு அபயமிட்டிருந்தார் (25:11). கி.பி. 59ல்[3], ஆகஸ்ட் மாதத்தில் அவரை ரோமாபுரிக்கு அனுப்பி வைக்கும் தயாரிப்பு வேலைகள் இறுதியாக நிறைவடைந்தன. “நாங்கள் இத்தாலியா தேசத்துக்குக் கப்பல் ஏறிப் போகும்படி தீர்மானிக்கப்பட்ட போது, பவுலையும் காவலில் வைக்கப் பட்டிருந்த வேறு சிலரையும் அகுஸ்து பட்டாளத்தைச் சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதியினிடத்தில் ஒப்புவித்தார்கள்” (வ. 1).*

*வசனம் 1ல் நமது கவனத்தை ஈர்க்கும் முதல் விஷயம் “நாங்கள்” என்பதாகும். லூக்கா பவுலுடன் எருசலேமுக்குப் பயணம் சென்றிருந்தார் (21:17) மற்றும் அவர் பவுலுடன் ரோமாபுரிக்குப் பயணம் செய்ய இருந்தார்! இரண்டாம் வசனத்தைக் காண்கையில், நாம் “மக்கெதோனியா தேசத்துத் தெசலோனிக்கே பட்டணத்தானாகிய அரிஸ்தர்க்கு” என்ற பவுலுடைய நண்பர்களில் இன்னொருவரும் கூட எருசலே முக்கு அவருடன் சென்றிருந்ததையும் (20:4) இப்பொழுது அவர் கப்பலில் இருந்ததையும் கவனிக்கின்றோம்.*

*பிறகு “காவலில் வைக்கப்பட்டிருந்த வேறு சிலரையும்”[4] என்ற கவலை தரும் சொற்றொடரால் தாக்கப்படுகின்றோம். “வேறு சிலரையும்” என்று மொழிபெயர்க்கப்பட்ட கிரேக்க வார்த்தையானது “மாறுபட்ட வகையான மற்ற சிலர்” என்று அர்த்தப்படுகின்றது. இந்த மற்ற கைதிகள் என்பவர்கள் அநேகமாக தண்டனை பெற்ற குற்றவாளிகளாயிருந்திருக்கக் கூடும். இவர்கள் ரோமாபுரிக்கு அனுப்பப்பட்டு, அங்கு கூட்டத்தாருக்குப் பொழுதுபோக்குவதற்காகக் காட்டு மிருகங்களிடம் தூக்கியெறியப்படுவதற்காக கப்பலில் அனுப் பப்பட்டிருக்கலாம். அப்படிப்பட்ட கொடூரம் நிறைந்த ஒரு உலகில் அவர்கள் வாழ்ந்தனர்.*

*பின்பு, வசனம் 1ல் நமக்கு, பவுல் “அகுஸ்து பட்டாளத்தைச் சேர்ந்த யூலியு என்னும் பேர்கொண்ட நூற்றுக்கு அதிபதி யினிடத்தில்” ஒப்புவிக்கப்பட்டதாகக் கூறப்படுகின்றது. ‘‘அகுஸ்துப் பட்டாளம்’’ என்பது ‘‘மேன்மை தாங்கிய’’ (அதாவது பேரரசர்) ஒருவருடன் தொடர்புடையதாயிருந்தது.*

சிலர் இது "சாம்ராஜ்யம் முழுவதிலும் காவலுக்கென்றும், தகவல் தருவதற்கென்றும் கடமை செய்த பேரரசரின் பணியாளர்கள்" என்று சிலர் நினைக்கின்றார்கள். பெஸ்துவும், உள்ளூர் ரோம அலுவலர்களும்[5] பவுலை யூலியுவினிடத்தில் அநேகமாக ஒரு வைபவத்தில் வைத்து ஒப்படைத்திருக்க வேண்டும். தேசாதிபதி தமது அலுவலக அறிக்கையை யூலியுவினிடத்தில் ஒப்புவித்ததை என்னால் காணவும், பிறகு அவர் பவுல் தண்டனை பெறாத ரோமக்குடிமகன் என்றும் அவருக்கு முன்னுரிமையான நடத்துதல் அளிக்கப்பட வேண்டும் என்றும் விளக்கிக் கூறுவதைக் கேட்கவும் முடிகின்றது.

சடங்குகள் யாவும் முடிவடைந்தன, எல்லாரும் கப்பலில் ஏறினார்கள். பிறகு அவர்கள் வழிவிட்டு அனுப்பப்பட்டார்கள்.[6] லூக்கா, "அதிரமித்தியம் ஊர்க் கப்பலில்[7] நாங்கள் ஏறி, ஆசியா நாட்டுக் கரை பிடித்தோட வேண்டுமென்று நினைத்துப் புறப்பட்டோம்" (27:2அ) என்று கூறினார். இத்தாலி செல்லும் ஒரு கப்பலைக் காண முடியாமல், அவர்கள் கடற்கரை வழியாக வடக்கு நோக்கிச் சென்று, ரோமாபுரி செல்லும் கப்பல் ஒன்றைக் காணும்போது அதில் மாறிப் பயணம் செய்யத் திட்டமிட்டார்கள். எல்லாம் நல்லபடியாக நடந்திருந்தால், அவர்கள் அக்டோபர் மாதத்திற்குள்ளாக ரோமாபுரிக்குச் சென்று சேர்ந்திருக்க வேண்டும்.

லூக்கா, "மறுநாள் சீதோன் துறை பிடித்தோம்" (வ. 3அ) என்று அறிக்கை தந்தார், இது செசரியாவுக்கு வடக்கே சுமார் எழுபது மைல்கள் தூரத்தில் இருந்த பெனிக்கே தேசத்தின் வர்த்தக நிறுத்தம் ஆகும். துறைமுகத்தில் இருக்கையில், கைதிகளில் பெரும்பாலோர் கப்பலில் அடித்தளத்தில் விலங்கிடப்பட்டு இருந்திருக்க வேண்டும், ஆனால் "யூலியு பவுலைப் பட்சமாய் நடப்பித்து, அவன் தன் சிநேகிதரிடத்திலே போய்ப் பராமரிப்படையும்படிக்கு உத்தரவு கொடுத்தான்" (வ. 3ஆ) - சந்தேகமின்றி ஒரு வீரர் அவருடன் சென்றிருந்திருப்பார். அந்த "சிநேகிதர்கள்" அநேகமாக சக கிறிஸ்தவர்களாகவே இருந்திருப்பார்கள் (3 யோவா. 14; யோவா. 15:5ஐக் காணவும்). பவுல் இதற்கு முன்பு அவர்களை பெனிக்கியா தேசத்தில் தமது பயணத்தின் பொழுதோ (அப். 12:25; 15:3) அல்லது எருசலேமுக்குச் செல்லும் வழியில் தீரு பட்டணத்தில் ஒரு

*வாரம் தங்கியிருந்த பொழுதோ (21:3, 4) சந்தித்திருக்கலாம், அல்லது அவர்களை முன்பு ஒருபொழுதும் சந்திக்காமல் இருந்திருக்கலாம். அது ஒன்றும் வித்தியாசத்தை ஏற்படுத்திய தில்லை; சககிறிஸ்தவர் ஒருவர் எப்பொழுதுமே ஒரு நண்ப ராகவே இருக்கின்றார் (இருக்க வேண்டும்). நமது வாழ்க்கைப் பயணத்தில் நம் யாவருக்கும் நண்பர்கள் தேவை (நீதி. 17:17).*

## *"எதிர்காற்றாயிருந்தது" (27:4-8)*

*சீதோனில் இருந்து, "... நாங்கள் புறப்பட்டு, எதிர்க்காற்றா யிருந்தபடியினால், சீப்புரு தீவின் ஒதுக்கிலே ஓடினோம்" (வ. 4). கோடை காலத்தில் காற்று பெரும்பாலும் மேற்கிலிருந்து அடித்தபடியினால், அவர்கள் மத்திய தரைக் கடலில் நேராகப் பயணம் செய்ய முடியாமல் இருந்தது. காற்றை எதிர்த்துப் பயணம் செய்யும் வகையில் கப்பல்கள் வடிவமைக்கப் பட்டிருக்கவில்லை (வ. 15) என்பதால், அவர்கள் ஓரளவுக்குப் பாதுகாப்புடன் பயணம் செய்யும்படியாக சீப்புரு தீவைச் சுற்றி வடக்கு முகமாய்ப் பயணம் செய்தார்கள்.*

*தேவனால் கூறப்பட்ட நோக்கத்தின்படியாகவே பவுல் ரோமாபுரியை நோக்கிப் பயணப்பட்டுக் கொண்டிருந்தார், இருப்பினும் அவர் எதிர்காற்றை எதிர் கொண்டார். நீங்கள் உங்கள் வாழ்வைத் தேவனுக்கு ஒப்புக் கொடுத்திருக்கிறீர்கள் என்ற உண்மையானது, உங்கள் நாட்கள் எப்பொழுதும் சூரிய ஒளியுள்ளதாகவும், எப்பொழுதுமே உங்களுக்குப் பின்னிருந்து காற்று உங்களை உந்தித்தள்ளிக் கொண்டிருக்கும் என்றும் அர்த்தப்படுத்தாது. எல்லா அனுபவமும் பெற்ற வாழ்க்கைப் பயணிகள், "எதிர்காற்று" அவ்வப்பொழுது வீசும் என்பதைக் கற்றுள்ளார்கள்.*

*அவர்கள் சீப்புரு தீவிற்கு வடக்கே பயணம் செய்கையில், பவுலுக்கு நன்கு பழக்கப்பட்ட இடங்களைக் கடந்து சென்றார்கள்: அவர்கள், "... சிலிசியா [பவுலின் சொந்த நகர மான தர்சு இருந்த இடம்], பம்பலியா [அவரும் பர்னபாவும் தங்களின் முதல் நற்செய்திப் பயணத்தில் கரையேறிய இடம் (13:13)] நாடுகளின் கடல் வழியாய் ஓடி ..." (வ. 5அ). சுமார் இரண்டு வாரங்கள் பயணம் செய்த பின்பு,[8] அவர்கள் "லீசியா நாட்டு மீறாப்பட்டணத்தில்" (வ. 5ஆ) சேர்ந்தார்கள், இது*

*ஆசியா மைனரின் தென்மேற்கில் இருந்த ஒரு மாகாணம் ஆகும்.*

*எகிப்திலிருந்து ரோமாபுரிக்குச் செல்லும் தானியக் கப்பல் களின் வழியில் மீறா என்பது ஒரு முக்கியமான துறைமுகமாய் இருந்தது. அங்கு நூற்றுக்கு அதிபதி, "இத்தாலியாவுக்குப் போகிற அலெக்சந்திரியா பட்டணத்துக் கப்பலை…" (வ. 6அ) காண முடிந்தது. அதில் கோதுமை ஏற்றப்பட்டிருந்தது (வ. 38). தானியக் கப்பல்கள் மிகவும் பெரியவைகளாய் இருந்தன (இந்தக் கப்பலில் சரக்குகளுடன் கூட இருநூற்று எழுபத்தி ஆறு நபர்களை[9] ஏற்றிக் கொள்ள [வ. 37] முடிந்திருந்தது). இப்படிப் பட்ட கப்பல்களில் பல, ரோமாபுரியுடன் ஒப்பந்தத்தின் கீழ் இருந்ததால் யூலியு போன்ற ரோமப் பிரதிநிதிகளுக்குச் சிறப் பிடம் அளிப்பவைகளாய் இருந்தன. இன்னமும் கூட, அக்டோபர் மாதத்தில் ரோமாபுரி சென்று சேர்ந்து விடலாம் என்று நம்பியிருந்த நூற்றுக்கு அதிபதி, ஒவ்வொருவரையும் அந்தப் பெரிய கப்பலுக்கு இடம் மாற்றினார் (வ. 6ஆ).*

*அவர்கள் ஆசியா மைனரின் கரை வழியே மேற்கு முக மாய்ப் பயணம் செய்தார்கள். நிலைமைகள் முன்னேற்ற மடையவில்லை; உண்மையில் தட்பவெட்ப நிலை மோசம் அடைந்தது. அவர்கள், "… அநேக நாள்[10] மெதுவாய்ச் சென்று …" ரோம மாகாணமான ஆசியாவின் தென்முனையில் இருந்த "கினீது பட்டணத்திற்கு" (வ. 7அ) வந்து சேர்ந்தார்கள். அவர்கள் கிரேக்க (அகாயா) நாட்டுக் கடலினூடே பயணம் செய்யலாம் என்று நம்பிக்கையாய் இருந்தார்கள், ஆனால் "காற்று [அவர்களைத்] தடுத்தபடியினாலே" (வ. 7ஆ) அவ்வாறு செல்வது இயலாததாக இருந்தது.*

*நீங்கள் திட்டமிட்டிருந்தபடி ஒன்றும் நடைபெறாத "கடினமான" நாட்களை நீங்கள் எப்பொழுதாவது பெற்றிருக் கின்றீர்களா? அலெக்சந்திரியாவின் தானியக் கப்பலில் இருந்த நபர்களில் சிலர் உங்களைப் பார்த்துப் பரிதாபப்பட முடியும்.*

*மறுபடியும் ஒரு தீவில் பாதுகாப்பு அடையலாம் என்று தேடப்பட்டது - இந்த முறை தெற்கில் பல மைல்கள் தூரத்தில் இருந்த கிரேத்தா தீவு[11] இதற்கென்று தேர்ந்து கொள்ளப் பட்டது. பல நாள் சிரமமான பயணத்திற்குப் பிறகு, தீவைச் சுற்றியோடி, கிழக்கு முனையில் இருந்த சல்மோனே ஊருக்கு எதிராக, "… கிரேத்தா தீவின் ஒதுக்கில் ஓடி" (வ. 7இ). "அந்தக்*

*கரையை வருத்தத்தோடே கடந்து" (வ. 8அ;* NIV*) அதன் பிறகு கடைசியில் "நல்ல துறைமுகம் என்னப்பட்ட ஒரு இடத்திற்கு" (வ. 8ஆ) - தீவில் இருந்து பாதி வழியில் இருந்த ஒரு துறைமுகத் திற்கு - வந்து சேர்ந்தார்கள். அங்கே கப்பலை நங்கூரம் பாய்ச்சி நிறுத்தி, காற்று திசை மாறி வீசுவதற்காகப் பொறுமையற்றுக் காத்திருந்தார்கள்.*

*உங்கள் திட்டத்தை* "on hold" *என்ற வகையில் எப்பொழு தாவது ஏற்ற சூழ்நிலை வரும்வரையில் நீங்கள் நிறுத்தி வைத்திருக்க நேர்ந்திருந்தால் அவர்களின் சலிப்புணர்வை நீங்கள் அறிவீர்கள்.*

## *"பயணம் இப்பொழுது அபாயகரமானது" (27:9-13)*

*ஒவ்வொரு நாளும் கடந்து சென்ற பொழுது, அக்டோபர் கடைசிக்குள் ரோமாபுரியைச் சென்று சேர்வது என்பது அடையக் கடினமானதாயிற்று. "வெகுகாலம் சென்று, உபவாச நாளும் கழிந்துபோனபடியினாலே, இனிக் கப்பல் யாத்திரை செய்கிறது மோசத்திற்கு ஏதுவாயிருக்குமென்று" (9அ). மத்திய தரைக்கடலில் பயணம் செய்வதற்கு "அபாயமான காலம்" என்பது செப்டம்பர் மத்தியில் இருந்து நவம்பர் 11 வரை உள்ள காலம் ஆகும். நவம்பர் 11க்குப் பிறகு, வசந்த காலம் வரையில் கப்பல் பயணம் நிறுத்தி வைக்கப்படும்; தொடர்ந்து வரும் மேக மூட்டங்கள் கடல் பயணத்தைக் கூடாத செயலாகச் செய்து விடும்.[12] கப்பல் இப்பொழுது "அபாயமான" கால கட்டத்தில் இருந்தது; "உபவாச நாளும் கழிந்து போனபடியினாலே" (வ. 9ஆ). "உபவாசம்" என்பது யூதர்களின் பாவ நிவாரண நாளைக் குறிக்கின்றது (லேவி. 16:29; 23:26, 27), இது கி.பி. 59ல் அக்டோபர் 5ம் நாளன்று வந்தது.[13]*

*கப்பலில் இருந்தவர்கள் காலம் நழுவிச் சென்றதை அறிந்தார்கள். கப்பற் பயணம் செய்ய முடியாத காலம் விரைவில் நெருங்கிக் கொண்டிருந்தது, எனவே கப்பலின் பொறுப்பாளர்கள் (வ. 11) என்ன செய்யலாம் என்று விவாதித் தார்கள். நல்ல துறைமுகம் "மழைகாலத்திலே தங்குவதற்கு வசதியாயிராது" (வ. 12அ) என்று அவர்கள் முடிவு செய்தார்கள்:*

அது கடலுக்குத் திறந்திருந்தது; கப்பலானது காற்று மழையில் இருக்க வேண்டியிருக்குமாகையால், சரக்குகள் தண்ணீரில் ஊறிப்போகக் கூடும். மேலும் மழை காலத்தில் அவர்கள் தங்குமளவு அது பெரிய நகரம் அல்ல (அருகில் இருந்த "லசேய பட்டணம்" [வ. 8இ] மிகவும் சிறியதாய் இருந்தது). இதற்கு மாறாக, பேனிக்ஸ் என்ற நகரமானது அங்கிருந்து மேற்கே 40 மைல் தூரத்தில்தான் இருந்தது. அது பாதுகாக்கப்பட்ட துறை முகத்துடன் கூடிய ஒரு முக்கிய நகரமாய் இருந்தது. மழை காலத்தின் நீண்ட மாதங்களில் அவர்களும் அவர்களின் கப்பலும் அங்கு நன்முறையில் தங்கியிருக்க முடியும்.

நல்ல துறைமுகத்தை விட்டுப் புறப்படலாம் என்று அவர்கள் யோசித்ததைப் பவுல் கேள்விப்பட்ட போது, அவர் கலக்கம் அடைந்தார். அவர் "அந்த கப்பலில் இருந்தவர் களிலேயே மிக அதிகமான அனுபவம் கொண்ட பயணியாக"[14] இருந்தார். அவர் மத்திய தரைக்கடலில் மேற்கொண்ட பதினோரு பயணங்களைப் (ரோமாபுரிப் பயணம் இல்லாமல்) பற்றி லூக்கா பதிவு செய்துள்ளார். இது குறைந்தது 3500 மைல்கள் தொலைவுப் பயணங்கள் ஆகும் - லூக்கா பதிவு செய்திராத மற்ற சில பயணங்களையும் பவுல் மேற்கொண்டி ருந்தார். அவர் மூன்று தரம்[15] கப்பற் சேதத்தில் இருந்தார் மற்றும் "கடலிலே ஒரு இராப் பகல் முழுவதும்" (2 கொரி. 11:25ஈ) போக்கினார். ஆகையால் பவுல் தாம் நினைத்ததை ஒவ்வொருவரிடமும் கூறத் தயங்கவில்லை: "மனுஷரே, இந்த யாத்திரையினாலே சரக்கும் கப்பலுக்கும் மாத்திரமல்ல, நம்முடைய ஜீவனுக்கும் வருத்தமும் மிகுந்த சேதமும் உண்டா யிருக்குமென்று காண்கிறேன் என்று சொல்லி, அவர்களை எச்சரித்தான்" (வ. 10).

பவுலின் கூற்று ஏவப்பட்டதாய் இருந்ததா? அவருடைய வார்த்தைகள் அவரது கடந்த கால அனுபவத்தின் அடிப்படை யில் அமைந்த பலத்த உறுதிப்பாடாகும் என்று நான் நம்பத் தலைப்படுகிறேன்: (1) பவுல் (வசனம் 23ல் உள்ள தமது பிந்திய ஒரு அறிவிப்பைப்போல) இது பரலோகத்திலிருந்து வந்த தென்று கூறவில்லை. (2) "காண்கிறேன்" என்று மொழிபெயர்க் கப்பட்டுள்ள கிரேக்க வார்த்தையானது "கடந்த கால அநுபவத் தில் இருந்து உணரப்பட்டது" என்று அர்த்தம் கொள்ள முடியும். (3) தொடர்ந்து நடந்த நிகழ்ச்சிகள் முன்னுரைத்தபடி

*மிகச் சரியாக நடைபெறவில்லை (உயிர் இழப்பு ஏற்பட வில்லை; வ. 22, 44).*[16]

*கப்பலில் இருந்த உயர் அதிகாரியான யூலியு இதில் ஈடுபாடற்றவராயிருந்தார். அவர் ஒருவேளை, "திருவாளர். கூடாரம் செய்பவரே/ரபீயே நீர் இதைப்பற்றி என்ன அறிந்திருக்கிறீர்? வல்லுநர்கள் நாம் இதைச் செய்ய முடியும் என்னும் போது, விவாதிக்க நீர் யார்?" என்று நினைத்திருப்பார். "நூற்றுக்கு அதிபதி பவுலினால் சொல்லப்பட்டவைகளைப் பார்க்கிலும் மாலுமியையும் கப்பல் எஜமானையும் அதிகமாய் நம்பினான்" (வ. 11). இவ்விதமாக, "அங்கிருந்து கப்பல் பயணத்தை மேற்கொள்வதென்பது பெரும்பான்மையானோர் தீர்மானம் செய்தார்கள். கிரேத்தாவின் ஒரு துறைமுகமான தென்மேற்கு மற்றும் வடமேற்கை நோக்கியிருந்த பேனிக்ஸை அவர்கள் சென்று சேர்ந்து விட்டால் மழைக் காலத்தில் அங்கு தங்கலாம் என்று ஆலோசித்தார்கள்" (வ. 12ஆ).*

*வாழ்க்கையில் மோசமான முடிவுகளை எடுப்பது எப்படி என்பதற்குத் தலைசிறந்த எடுத்துக்காட்டு இருக்கும் என்றால் அது இதுதான்: தேவனுடைய ஆலோசனையைப் புறக்கணித்து விடுதல் (நீதி. 1:5; 19:20; வெளி. 3:8); மக்கள் மற்றும் கொள்கை கள் ஆகியவற்றைக் காட்டிலும், இலாபம் மற்றும் இன்பம் ஆகியவற்றைப் பற்றி அதிக அக்கறைப்படும் "வல்லுநர்களின்" ஆலோசனைகளைக் கவனித்தல் (நீதி. 12:5; 1 கொரி. 3:18-20); மற்றும் பெரும்பான்மையோருடன் ஒத்துச் செல்லுதல் (யாத். 23:2; மத். 7:13).*

*தொடர்ந்து ஏற்பட்ட அழிவுக்குரிய விளைவுகள் பவுலின் தவறினால் அல்ல ஆனால் மற்றவர்களின் தவறினால்தான் உண்டாயின என்பதைக் கவனியுங்கள். சில வேளைகளில் நமக்கு ஏற்படும் துயரங்கள் நாமே வருவித்துக் கொண்டவை களாய் இருக்கின்றன (யோனா 1:12), ஆனால் சில வேளை களில் அவை மற்றவர்களின் தவறினால் வருகின்றன. நமது தவறான முடிவினால் இல்லாமல் - பவுலைப் போல - மற்றவர் களின் தவறினால் நாம் துன்பப்பட வேண்டியிருக்கும்.*

*முதலில், பெரும்பான்மையோர் மிகச் சிறந்த முடிவெடுத்த தாகவே காணப்பட்டது - ஏனென்றால் அவர்கள் எதிர் பார்த்துக் கொண்டிருந்தபடியான தென்றல் காற்று மெதுவாய் அடித்தது. "தென்றல் மெதுவாயடித்தபடியால், தாங்கள்*

*கோரினது கை கூடி வந்ததென்று எண்ணி, அவ்விடம் விட்டுப்பெயர்ந்து கிரேத்தா தீவுக்கு அருகாக ஓடினார்கள்'' (அப். 27:13). வாழ்க்கையில் பல முறைகள் புயல் வீசும் முன்பு நமக்குச் சீராட்டுதல் ஏற்படுவதுண்டு.*

## *"நம்பிக்கை முழுமையும் அற்றுப் போயிற்று" (27:14-21)*

*அவர்கள் சேர வேண்டிய இடத்திற்குச் சில மணிகள் பயணத் தூரத்தில் அழிவு மோதியது. ''கொஞ்ச நேரத்துக் குள்ளே யூரோக்கிலிதோன் என்னும் கடுங்காற்று அதில் மோதிற்று" (வ. 14). "யூரோக்கிலிதோன்" என்பது "வடகிழக் கில்" இருந்து வரும் புயல்காற்றுக்கு மாலுமிகள் வைத்திருந்த பெயர் ஆகும். கிரேத்தா தீவின் ஒதுக்கில் இருந்து அந்தக் காற்று வீசியதால் அக்கப்பலானது வேறு எந்தத் துறைமுகங்களுக்கும் செல்ல முடியாமல் கடலினுள்ளாகவே செல்ல வேண்டிய தாயிற்று. "கப்பல் அதில் அகப்பட்டுக் கொண்டு, காற்றுக்கு எதிர்த்துப் போகக் கூடாதபடியினால் காற்றின் போக்கிலே கொண்டு போகப்பட்டோம்'' (வ. 15). காற்று மற்றும் அலைகளில் இரக்கத்தில் கப்பல் இருந்தது.*

*தென்கிழக்குத் திசை நோக்கி பல மணிநேரம் துரத்தப்பட்ட பிறகு, அவர்கள் "கிலவுதா என்னப்பட்ட ஒரு சின்னத் தீவின் ஒதுக்கிலே" (வ. 16அ) ஓடினார்கள். கணநேரச் சீராட்டுதலின் வாய்ப்பை பயன்படுத்திக் கொண்டதால், கடல் பயணத்தில் கப்பலை நிலைநிறுத்த அவர்கள் கடினமாய் முயற்சி செய்ய வேண்டியதாயிற்று. லூக்கா கூட கப்பலின் பின்புறத்தில் இருந்த உயிர்காக்கும் படகின் உதவியை நாடவேண்டிய தாயிற்று. தமது துன்பத்தை (மற்றும் ஒருவேளை தமது கொப்புளங்களை) நினைவு கூர்ந்த அவர், "வெகு வருத்தத் தோடே படவை வசப்படுத்தினோம்'' (வ. 16ஆ) என்று கூறினார்.*

*''அதை [படவை] அவர்கள் தூக்கியெடுத்த பிறகு, பல உபாயங்கள் செய்து, கப்பலைச் சுற்றிக்கட்டி'' (வ. 17அ). "கட்டுவதற்கு" அவர்கள் கயிறுகள் மற்றும் சங்கிலிகள் ஆகிய வற்றைக் கப்பலின் உடலுடன் பிணைத்து கப்பலைப் புயலில்*

*அகப்படாமல் நிலைநிறுத்த முயற்சி செய்திருக்கலாம். பிறகு, “சொரி மணலிலே விழுவோமென்று பயந்து, பாய்களை இறக்கி, இவ்விதமாய்க் கொண்டு போகப்பட்டார்கள்” (வ. 17ஆ). “சொறி மணல்” என்பது வட ஆப்பிரிக்காவின் கடற்கரைப் பகுதிகளில் இருந்த மணற் திட்டுகள் ஆகும் - இது மாலுமிகள் பயப்பட்ட ஒரு கப்பல் கல்லறையாய் இருந்தது. அந்தப் பகுதியானது தெற்கே பல மைல்கள் தூரத்தில் இருந் தாலும், புயலில் ஒரு கப்பலானது எவ்வளவு தூரம் துரத்தப்பட முடியும் என்று அவர்கள் அறிந்திருந்தார்கள். அவர்கள் கப்பலின் வேகத்தைக் குறைக்கலாம் என்ற நம்பிக்கையில் “பாய்களை” இறக்கினார்கள். அந்த வேளையில் கப்பலானது அந்தச் சிறு தீவின் பாதுகாப்பிலிருந்து வேகமாக விலக்கப்பட்டு ஓடியது; அவர்கள் வேறு ஒன்றும் செய்ய முடியாமல் “இவ்விதமாய்க் கொண்டு போகப்பட்டார்கள்” (வ. 17இ).*

*நீண்ட காலத்திற்கு முந்திய அந்த மாலுமிகளிடம் இருந்து பின்வருவதை நீங்கள் கற்றுக் கொள்ள முடியும்: உங்கள் வாழ்க்கையைச் சோதனைப் புயலானது தாக்கும்பொழுது, அழிவைக் குறைக்க உங்களால் இயன்றதைச் செய்யுங்கள்,* “batten down the hatches” *என்ற மரபுச் சொல்லுக்கிணங்க துன்பத்தின் வாயில்களை அடைத்து விட்டு, புயலில் பயணம் செய்யத் தயாராகுங்கள்.*

*கப்பலில் இருந்தவர்கள் புயலானது விரைவில் அமர்ந்து விடும் என்று நினைத்திருந்தால், அவர்கள் ஏமாற்றமே அடைந் தார்கள். “மறுநாளில்” “மேலும் [அவர்கள்] பெருங் காற்று மழையில் மிகவும் அடிபட்டார்கள்” (வ. 18அ). உங்களை அவர்களின் இடத்தில் வைத்துப் பாருங்கள். அலறும் காற்றை யும், கிரீச்சிடும் கப்பல் பலகைகளையும், வலிந்து இழுக்கும் கயிறுகளையும் காதினால் கேட்டு உணருங்கள். சுழன்று செல்லும் கறுத்த மேகங்களையும், கப்பலின் மேல் தளத்தைக் கழுவிச் செல்லும் கோபமான அலைகளையும் காணுங்கள். கொந்தளிக்கும் கடலில் கப்பலானது மேலும் கீழும் அசை வாடியது, உங்களால் காலூன்றி நிற்க முடியாமல் போராட வேண்டியதாயிருந்தது. உப்பு நீரானது உங்கள் முகத்தில் தெறித்து, நீங்கள் உப்பு நீரில் மூழ்கினீர்கள். புயல்கள் துன்பகர மான நிலையில் உண்மையானவை - அது கப்பலிலோ அல்லது வாழ்க்கையிலோ எங்கு இருந்தாலும் துன்பகரமானதே ஆகும்.*

நம்பிக்கையிழந்த வேளைகள் நம்பிக்கையிழந்த செயல் பாடுகளை அழைக்கின்றன. "... மறுநாளில் சில சரக்குகளைக் கடலில் எறிந்தார்கள்'' (வ. 18ஆ). அவர்களது வாழ்வு சரக்குகளைச் சார்ந்ததாய் இருந்தது, ஆனால் அவர்களின் வாழ்க்கையைக் காட்டிலும் அவர்கள் தங்களின் உயிரைக் குறித்து அதிகமாய்க் கவலைப்பட்டார்கள். "மூன்றாம் நாளிலே கப்பலின் தளவாடங்களை எங்கள் கைகளினாலே எடுத்து எறிந்தோம்'' (வ. 19). கப்பலை இலேசானதாக்குவதற்காக அவர்கள் கப்பலில் இருந்த தங்களுக்கு அவசியமாய்த் தேவைப்படாத ஒவ்வொன்றையும் எடுத்து எறிந்தார்கள்.

புயல் தொடர்ந்தது: ''அநேக நாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல்'' (வ. 20அ). அந்த நாட்களில் அவர்களிடம் தங்கள் நிலையைக் கணக்கிடுவதற்கு திசை காட்டும் கருவியோ அல்லது கோணமானியோ இருந்த தில்லை. கடற்பயணமானது பகலில் சூரியனையும் இரவில் நட்சத்திரங்களையும் சார்ந்திருந்தது. ஆகையால் அவர்கள் எங்கு இருந்தார்கள் என்பது பற்றிய கருத்தெதுவும் அவர்களி டத்தில் இல்லாதிருந்தது. அவர்கள் எப்பொழுது வேண்டு மானாலும் சொரிமணலிலோ அல்லது மறைவான பாறை யொன்றிலோ மோதக் கூடும் என்பதை மட்டும் அறிந்திருந்தார்கள்.

ஏறக்குறைய இரண்டு வாரங்களாக புயலானது கப்பலை அலக்கழித்தது, அதில் இருந்தவர்கள் எந்த நேரத்திலும் மூழ்கக் கூடும் என்ற அபாயமான நிலை இருந்தது. "அநேக நாளாய்ச் சூரியனாவது நட்சத்திரங்களாவது காணப்படாமல், மிகுந்த பெருங்காற்று மழையும் அடித்துக் கொண்டிருந்தபடியினால், இனித் தப்பிப் பிழைப்போமென்ற நம்பிக்கை முழுமையும் அற்றுப் போயிற்று" என்று லூக்கா எழுதினார் (வ. 20).

அதுவே இவ்வரலாற்றின் மிகக் கீழான படிநிலையாகும். அம்மனிதர்கள் தண்ணீரில் ஊறிப்போய், குளிரினால் விறைத்து, எலும்புகளில் அயர்ச்சியுண்டாகி, பசியினால் பலவீனம் அடைந்தார்கள். "அநேக நாள் அவர்கள் போஜனம் பண்ணாமல் இருந்தபோது" (வ. 21அ); "வழி முறைகள், காலம் மற்றும் ஒழுங்காக உணவு தயாரித்து உண்ணுதலில் விருப்பம் ஆகிய எல்லாவற்றிலும் இருந்து புயலானது அவர்களை நீக்கிப் போட்டது."[17] வருத்தத்தின் சித்தரிப்பில் லூக்கா தம்மையும்

*உள்ளடக்கியதைக் கவனியுங்கள்: "இனித் தப்பிப் பிழைப் போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப்போயிற்று" (வ. 20;* NIV*). "பிழைப்போம்" என்ற வார்த்தை பவுலையும் உள்ளடக்கியிருந்ததா? ஒருவேளை தூதன் பவுலுக்கு தோன்றிய போது, "பயப்படாதே" (வ. 24அ) என்று புத்தி கூறியிருக்கலாம். புயலினால் கடுமையாக மற்றும் நீண்ட அளவில் தாக்கப் பட்டபோது மிகப் பலமானவர் கூட முழங்கால்படியிடக் கட்டாயப்படுத்தப்பட்டிருப்பார்.*

*உங்களில் சிலர், உங்களின் திருமணம் கஷ்டத்திலிருக்கும் போது, துன்பத்தின் அடித்தளத்திற்கு ஓடி, தோல்வியென்னும் கலக்கப்படுத்தும் தண்ணீரில் மூழ்கியும், உங்களின் உணர்வு மற்றும் ஆவிக்குரிய நிலையில் பாதையை விட்டு நீங்கள் விலகியிருப்பதைக் காணும்போது அது எப்படியிருக்கும் என்று அறிவீர்கள். வெளிச்சமின்றி ஒவ்வொரு நாளையும் கழிப்பது எப்படி என்பதை நீங்கள் அறிந்திருக்கக் கூடும். நீங்களும் கூட முழங்காலில் இருக்கும்படி துரத்தப்பட்டிருக்கலாம்.*

## முடிவுரை

*நமது பாடத்தை முடிக்கும் இந்த இடம் எவ்வளவு கவலைக்குரியதாயும், வினோதமானதுமாயும் உள்ளது: "இனித் தப்பிப் பிழைப்போமென்னும் நம்பிக்கை முழுமையும் அற்றுப் போயிற்று" (வ. 20இ). தேவன் அவர்களின் நம்பிக்கையை எப்படி மீட்டார் மற்றும் அவர்களை எப்படிக் காத்தார் என்பதை பிறகு நாம் காண்போம். இப்பொழுது, நாம் நாள் தோறும் வாழ்க்கைப் புயலினால் தாக்கப்படும்பொழுது நம்பிக்கையின்மையின் உணர்வுடன் போராடுவது தேவை யாய் இருக்கின்றது.*

*அப்படிப்பட்ட ஒரு மனநிலையில் நாம் பெரும்பாலும், "ஏன்? கர்த்தாவே ஏன் இப்படிப்பட்ட புயல்களை நீர் அனு மதிக்கின்றீர்?" என்று கதறுகின்றோம். நாம் பார்க்கும் இவ்வரலாற்றின் முடிவைக் கவனிப்பதனால், பவுல் புயலில் அகப்படும்படி தேவன் செய்தது ஏன் என்ற கேள்விக்குச் சில பதில்களைத் தர முடியும். புயலில் உயிர் பிழைத்தது என்பது அநேகமாகப் பவுல் விசுவாசத்தில் உறுதிப்படச் செய்திருக்கும். தேவன் தம்மீது அக்கறையாயிருந்ததற்கான இன்னொரு செயல்*

*விளக்கத்தை அவர் பெற்றுக் கொண்டார். மற்றும், புயலானது பவுலுக்கு அவர் வேறுவழிகளில் பெற முடிந்திராத வாய்ப்புக் கள் சிலவற்றைக் கொடுத்தது. எடுத்துக்காட்டாக, அவர் கர்த்தர்மேல் தாம் கொண்டிருந்த நம்பிக்கையை செயல் விளக்கப்படுத்தும் வாய்ப்பைப் பெற்றார். (நீங்கள் உங்கள் வாழக்கைப் புயலில் எவ்விதம் செயல்படுகின்றீர்கள் என்பதை அவிசுவாசிகள் எப்பொழுதுமே கவனித்துக் கொண்டிருக் கின்றார்கள்.) தேவனற்ற மக்கள் 273 பேருக்கு உண்மைத் தேவனைப் பற்றிக் கூறக் கூடிய வாய்ப்பைக் கூடப் பவுல் பெற்றிருந்தார்! அநேகமாக - அவர்கள் பாதுகாப்பாகக் கரை சேர்ந்த பிறகு - அவர்கள் இயேசுவைப் பற்றிக் கேள்விப்படக் கூடத் தயாராக இருந்திருப்பார்கள். முடிவில், பவுலுக்கும் மற்றவர்களுக்கும் புயலானது ஆதாயம் தருவதாகவே இருந்தது. இருப்பினும் "முடிவில்" என்ற சொற்றொடரைக் கவனிக்கவும். புயல் கொந்தளித்துக் கொண்டிருக்கையில் அந்த ஆதாயங்கள் தெளிவாய்க் காணப்படவில்லை. அதுபோலவே, சோதனைகள் நம்மை மூழ்கடிக்கும் போது, அந்த உபத்திரவத்திலிருந்து நன்மை வருவது எப்படி என்பதைக் காண்பது கூடச் சில வேளைகளில் நமக்குக் கடினமாய் இருக்கும்.*

*நாம் முழங்காலில் இருக்கும்படிப் புயலால் விரட்டப் படுகையில் நாம் என்ன செய்ய வேண்டும்? பவுல் செய்தது போலவே செய்யுங்கள் (வ. 24): இதற்கு முன் ஒருபோதும் நீங்கள் ஜெபித்திராதது போல ஜெபியுங்கள் (பிலி. 4:6; யாக். 5:13) - மற்றும் புயலைப் பற்றி நாம் ஒருபோதும் அறிந்திரா தவைகளை அதிகமாய் அறிந்துள்ள கர்த்தரை நம்புங்கள் (2 கொரி. 1:9, 10; 2 தீமோ. 1:12).*

*கர்த்தரை நம்புவதற்குக் கற்றுக் கொண்ட ஒரு மனிதரைப் பற்றிய கதையுடன் இதை நான் முடிக்கின்றேன்: 1873ல் சிகாகோவில் இருந்த ஹோராஷியோ G. ஸ்பாஃபோர்டு என்ற ஒரு வியாபாரி விடுமுறையில் தமது குடும்பத்தை ஐரோப்பா வுக்கு அழைத்துச் செல்ல முடிவு செய்தார். அவர் பிரென்ச்சுக் கப்பல் ஒன்றில் பயணச் சீட்டுகளை முன் பதிவு செய்தார், ஆனால் கடைசி நிமிடத்தில் அவரது வியாபார அலுவலானது அவரை அப்பயணம் செல்லாதபடிக்குத் தடுத்தது. அவர் தமது மனைவியையும் நான்கு மகள்களையும் அந்தக் கப்பலில் அனுப்பி விட்டு, தாம் பிற்பாடு ஐரோப்பாவில் அவர்களுடன்*

*இணைந்து கொள்ளத் திட்டமிட்டார். நவம்பர் 22ம் தேதி யன்று அந்தக் கப்பலின் மீது இன்னொரு கப்பல் வந்து பலமாக மோதியது. பன்னிரெண்டு நிமிடங்களில் அந்தக் கப்பல் பெருங்கடலின் அடி வரைக்கும் மூழ்கியது. ஸ்பாஃபோர்டின் நான்கு மகள்கள் உட்பட 226 பேர் கொல்லப்பட்டார்கள். ஒன்பது நாட்களுக்குப் பிறகு, தப்பிப் பிழைத்தவர்கள் இங்கிலாந்து சேர்ந்த பொழுது, அவரது மனைவி அவருக்கு இரண்டு வார்த்தைகளில் "தனியாகக் காக்கப்பட்டேன்" என்று செய்தி அனுப்பினார்கள். அவர் உடனடியாக இங்கிலாந்து செல்லும் வேறொரு கப்பலில் புறப்பட்டு தமது மனைவியுடன் இருக்கச் சென்றார். ஒரு இரவில் கப்பல் தலைவர் அவரைத் தமது அறைக்கு அழைத்து வந்தார். ''உங்களின் நான்கு மகள்களுடன் கப்பல் மூழ்கிய இடத்திற்கு வெகு அருகில் நாம் வந்து சேர்ந்திருக்கின்றோம்" என்று கப்பல் தலைவர் கூறினார். ஸ்பாஃபோர்டு தமது அறைக்குத் திரும்பினார். அங்கு, "மரண நிழலின் பள்ளத்தாக்கில்" அவர் எழுதிய கவிதையானது நம்மை இருபது ஆண்டுகளாக ஆறுதல் படுத்திக் கொண்டிருக்கின்றது:*

> *சமாதானம் என் வழியில் நதி போல வரும் பொழுது,*
> *சஞ்சலங்கள் கடலின் பேரலைகளாய்ச் சூழலும் போது;*
> *எனக்கு நீர் விதித்தது எதுவாயிருப்பினும், "அது நல்லது,*
> *அது என் ஆத்துமாவுக்கு நல்லது" என்று நான் கூற நீர்*
> *எனக்குப் போதித்திருக்கின்றீர்.*

*தேவனால் உங்களுக்கு விதிக்கப்பட்டது எதுவாயிருந் தாலும், ''சஞ்சலங்கள் கடலின் பேரலைகளாய்ச் சூழும்'' பொழுது நீங்கள் "அது என் ஆத்துமாவுக்கு நல்லது" என்று கூற முடியும்படியாக நான் ஜெபிக்கின்றேன்.[18]*

## *காட்சி - உதவிக் குறிப்புகள்*

*இந்தப் பாடத்தையும் இதன் வேத பாடத்தையும் போதிப்பதற்கு நில வரைபடம் ஒன்று இன்றியமையாததாகும். பவுலின் ரோமாபுரிப் பயணம் பற்றிய நில வரைபடத்தை கரும்பலகை அல்லது பெரிய வரைபடத்தாளில் பெரிதாக*

*வரைந்து, உங்கள் உரையைக் கேட்பவர்கள் அப்பயணத்தை நன்கு புரிந்து கொள்ள உதவுங்கள்.*

---

குறிப்புகள்

[1]*இந்தப் பாடத்தையும், இதற்கு அடுத்த பாடத்தையும் "பவுலின் ரோமாபுரிப் பயணம்" பற்றிய நில வரைபடத்தைக் கையில் வைத்துப் படிக்கவும். [2]"மோட்சப் பிரயாணம்" (Pilgrim's Progress) என்பது 1600களில் ஜான் பனியன் என்பவரால் எழுதப்பட்ட ஒரு உருவகக் கதையாகும். இதில் அழிவின் நகரில் இருந்து நித்திய நகரத்திற்குச் செல்லும் பயணியின் முக்கிய பண்புகள் சித்தரிக்கப் பட்டுள்ளன. [3]நாம் நிலைநாட்டியுள்ள நாள் வரிசைக் கணக்குடன் (பலஸ்தீனத்தை விட்டு பேலிக்ஸ் புறப்பட்டதும் பெஸ்து அங்கு வந்து சேர்ந்ததுமான நாள் வரிசைக் கணக்குடன்) கி.பி. 59 என்பது ஒத்துப் போகின்றது. அந்த தேதியானது "உபவாச" (பாவ நிவாரண) நாள் வந்த கடற்பயணம் அபாயமாயிருந்த வருடப் பின்பகுதியுடனும் ஒத்துப் போகின்றது. வசனம் 9ன் குறிப்புகளைக் காணவும். வசனம் 9ல் இருந்து பின் கணக்கீட்டு முறையில் ஆகஸ்டு மாதம் பெறப்பட்டுள்ளது. [4]அரிஸ்தர்க்குவும் இவர்களில் ஒருவராய் இருந்தாரா? இது ஏற்புடையதாய்க் காணப்படுவதில்லை. பின்னாளில் பவுல் அரிஸ்தர்க்குவை "என்னோடே கூடக் காவலில் இருக்கிறவன்" என்று குறிப்பிட்டார் (கொலோ. 4:10). இது அரிஸ்தர்க்கு கைது செய்யப் பட்டிருந்தார் என்றோ அல்லது பவுலுக்கு ஊழியம் செய்யும்படி தாமே முன் வந்து ஒப்புக் கொடுத்தார் என்றோ அர்த்தப்பட முடியும் (பிலே. 4ஐக் காணவும், இது கொலோசெயருக்கு நிருபம் எழுதப்பட்ட அதே வேளையில் எழுதப்பட்டதாகும்). பின்னாளில் அரிஸ்தர்க்கு ரோமாபுரியில் ஒரு கைதியாக இருந்திருந்தாலும் கூட, அவர் ரோமாபுரிப் பயணத்தின் போது கைதியாயிருந்தாரா என்று நிச்சயமாய்க் கூற முடியாது. [5]அகிரிப்பா அரசர் இன்னமும் செசரியாவில் இருந்து, வசனம் 1ல் உள்ள "ஒப்புவித்தார்கள்" என்பதில் உள்ளடக்கப்பட்டிருக்கும் சாத்தியக் கூறு உள்ளது. [6]பலஸ்தீனத்தின் முக்கியமான கடற்துறைமுகமும், பவுல் இரண்டாண்டுகள் சிறை வைக்கப்பட்டிருந்த இடமுமான செசரியாவில் இருந்து அவர்கள் புறப்பட்டிருக் கலாம். [7]அதிரமித்தியம் என்ற ஊரானது ஆசியா மாகாணத்தின் மேற்குக் கரையில், துரோவாவுக்கு அருகில் இருந்த ஊர் ஆகும். இது அநேகமாக தனது சொந்த துறை முகத்திற்குத் திரும்பிச் சென்ற கடற்கலமாக இருக்கலாம். [8]கரைவழியே சீதோனில் இருந்து மீறாவுக்குச் செல்ல சாதாரணமாகப் பத்து முதல் பதினைந்து நாட்கள் வரை தேவைப்பட்டது. இவ்விதமாக இப்பயணத்திற்குப் பதினான்கு நாட்கள் ஆனது என்று மேற்கத்திய வசனத்தில் கூடுதலாக விபரம் தரப்பட்டுள்ளது. [9]சில கையெழுத்துப் பிரதிகளில் 76 பேர் என்றுள்ளது, ஆனால் பெரும்பான்மையான கையெழுத்துப் பிரதிகளில் 276 பேர் என்றே உள்ளது. [10]மீறாவிலிருந்து கினீதுவுக்குச் சுமார் 170 மைல்கள் தூரம் இருந்தது. "அநேக நாள்" என்பது அநேகமாக பத்து முதல் பதினான்கு நாட்கள் வரையிருந்திருக்கலாம்.*

[11]*கிரேத்தாத் தீவார் பெந்தெகொஸ்தே நாள் அன்று எருசலேமில் இருந்திருந் தார்கள் (அப். 2:11); ஒருவேளை அவர்களில் சிலர் கிறிஸ்தவர்கள் ஆகியிருக்கலாம். பின்னாளில் பவுல் கிரேத்தாவில் ஊழியம் செய்திருந்தார் (தீத்து 1:5). வேதாகமம் எழுதப்பட்ட காலங்களில் கிரேத்தாத் தீவார் புகழ் குறைந்தவர்களாயிருந்தனர் (தீத்து 1:12). [12]வசனம் 20க்கான குறிப்புகளைக் காணவும். [13]"உபவாச நாளும் முடிந்து போனபடியால்" என்ற உண்மையானது இது கி.பி. 59ல் நடந்ததை உறுதிப்படுத்து*

*கின்றது. பாவநிவாரண நாளானது நிலவின் தோற்றங்களின் அடிப்படையில் கணக்கமைக்கப்பட்டது. கி.பி. 59க்கு முந்திய மற்றும் பிந்திய இரு வருடங்களிலும் இப்பண்டிகை நாளானது, பயணத்தைத் தொடர்ந்தால் அழிவு நிச்சயம் என்று பவுல் முன்னுரைத்த காலத்திற்கு மிகவும் முற்பட்ட நாளில் கொண்டாடப்பட்டது.* [14]William Barclay, *The Acts of the Apostles*, The Daily Study Bible Series, rev. ed. (Philadelphia: Westminster Press, 1976), 182. [15]*இது மிகவும் திகைப்புக்குரியது. நான் மூன்று முறை ஆகாய விமான விபத்துக்களில் இருந்திருந்தால், இன்னொரு ஆகாய விமானத்தில் ஏறுவது எனக்கு மிகவும் கடினமாய் இருந்திருக்கும்.* [16]*சில வேளைகளில் தேவன் ஒரு பேரழிவை அறிவித்து விட்டு, பிறகு ஜெபத்திற்குப் பதில் அளிக்கும் வகையில் அப்பேரழிவை மாற்றியமைப்பதுண்டு (எடுத்துக்காட்டாக எண். 14:11-24ஐக் காணவும்).* [17]Orrin Root, ed., *Standard Bible Commentary: Acts* (Cincinnati, Ohio: Standard Publishing Co., 1966), 196. [18]*இப்பாடம் ஒரு பிரசங்கமாகப் பயன்படுத்தப் பட்டால், விசுவாசிகள் மற்றும் அவிசுவாசிகள் ஆகியோருக்கு ஒன்று போலவே புயல் ஏற்படுகிறது என்பது வலியுறுத்தப்பட வேண்டும். கேட்பவர்கள் கிறிஸ்தவர்களாகும் படி ஊக்குவிக்கப் படுவதற்கு விசுவாசிகளுக்கு ஆறுதலின் ஆதாரம் உண்டென்பதும், அவிசுவாசிகள் புயலை அமர்த்த ஆறுதலின் ஆதாரம் எதுவுமற்று இருக்கின்றார்கள் என்பதும் கற்றுத்தரப்பட வேண்டும்.*